ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

===============================================================================

# சங்க கால நெய்தல் நிலத் தலைமக்கள்
## (கொண்கன், துறைவன், சேர்ப்பன் ஆகியோரது பண்பாட்டு வாழ்வியல்)

முனைவர் சாகருணாகரன் .
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (தன்நிதிப்பிரிவு)
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை –600 059

===============================================================================

ஆய்வுச்சுருக்கம்

சங்க கால நெய்தல்நிலக் குடிகளின் பல்வேறு பெயர்களைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது .இவர்களுள் குறிப்பிட்ட சில பெயர்களை உரையாசிரியர்கள் தலைமக்களெனக் குறிக்கின்றனர்அவர்கள் அவ்வாறு குறிப்பதற்கான . தலைமக்களென உரையாசிரியர்களால் .காரணத்தை ஆயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது குறிப்பிடப்பெறுவோர் கொண்கன், துறைவன், சேர்ப்பன் ஆகியோராவர்இவர்கள் பற் .றிய சங்க இலக்கியப் பதிவுகளைத் தொகுத்தாய்ந்து, அவர்கள் தலைமக்களென மொழிவதற்கான காரணங்களும் அவர்தம் பண்பாட்டு வாழ்வியலும் இக்கட்டுரையில் ஆயப்பெறுகின்றன.

முன்னுரை

பழந்தமிழர்கள் நீரின் ஓட்டத்தைக்கொண்டு நிலப்பகுதியை நான்காக வகைப்படுத்தினர் . மலைப்பகுதிகளில் பொழியும் மழைநீர் இறுதியாகக் கடலில் சேரும் கடற்கரைச் சார்ந்த பகுதியை நெய்தல் நிலம் என்று அழைத்தனர்இது கடற்கரைப் பகுதிகளையும் ., கடற்கரைச் சார்ந்த ஊர்களையும் குறிக்கும்.

இப்பகுதிகளில் கொண்கன், சேர்ப்பன், திமிலர், துறைவன், நுளைச்சியர், நுளையர், பரதவர், பரத்தியர், புலம்பன் உள்ளிட்ட பெயர்களைக் கொண்ட மக்கள் குழுக்கள் வாழ்ந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்களின் வாயிலாகவும், உரையாசிரியர்களின் வாயிலாகவும், நிகண்டுகளின் வாயிலாகவும் அறியமுடிகின்றனஇவர்கள் ., பட்டினம், பாக்கம், ஊர், சிறுகுடி முதலிய கடற்கரைச் சார்ந்த குடியிருப்புகளில் வாழ்ந்தனர்இவர்களில் தலைமக்களாகக் கருதப்பெறும் . .நெற்தற்குடிகளைப் பற்றி இக்கட்டுரை விவரிக்கின்றது

நெய்தற்குடிகளுள் தலைமக்கள்

நெய்தல் நிலம், மணல்மேடுகளும், கழிகளும், சோலைகளும் நிறைந்த பகுதியாகவும், அலை தழுவும் பகுதியாகவும் திகழ்ந்தது .அப்பகுதிகளில் எங்கும் நிறைந்து மலர்ந்திருந்த நெற்தற் பூக்களைக்கொண்டு இந்நிலம் இப்பெயர் பெற்றது என்பர் நச்சினார்க்கினியரும், இளம்பூரணரும்.[1]

இங்கு வாழ்ந்த நெய்தற்குடிகளில்,

- கொண்கன்
- துறைவன்
- சேர்ப்பன்

ஆகியோர் தலைமக்களென அறியப்பெறுகின்றனர்தொல்காப்பியப் பொரு .ளதிகார அகத்திணையியலில் தலைமக்கட் குறித்து,

*‘தலைமக்கள் பெயராவன, பெயர்ப் பெயரும் நாடாட்சி பற்றி வரும் பெயருமாம்’ (நச்சினார்க்கினியம் .ப .56)*

*என்கிறார் நச்சினார்க்கினியர்நாடாட்சி மட்டுமல்லாது ., இத்தலைமக்கள் பற்றிய பண்பாட்டு வாழ்வியல் குறிப்புகள் சங்க இலக்கிய நெய்தல் திணைப்பாடல்களில் காணப்படுகின்றனஅவை . .விரிவாக இங்கு விளக்கப்பெறுகின்றன*

*கொண்கன்*

*கொள்கு என்னும் சொல்லிலிருந்து கொண்டு என்ற சொல் தோன்றி, அன் விகுதியோடு கொண்கன் என்றானது.*[2] *கொள்கு என்பதற்கு வளைந்த‘’ என்று பொருள்வளைந்து நெளிந்து . காணப்பட்ட கடற்கரையைச் சார்ந்தவன் அல்லது கடற்கரைக்கு உரியவன் என்ற பொருளில் .கொண்கன் என்னும் சொல் வழங்கப்படலாயிற்று*

*நெய்தற்திணைப் பாடல்களில் கொண்கன் என்னும் சொல் 24 முறை இடம்பெற்றுள்ளனநெற்தல் . நிலத் தலைவனாகக் குறிப்பிடப்பெறும◌் கொண்கனைப் பற்றிய செய்திகளான:*

*கொண்கன் தேனை ஊதும் வண்டுகள் ஒலிக்கும் மாலையையும், மார்பில் மின்னும் கொடும் பூணினையும் அணிந்திருப்பான் .நற்)187: 6-10). அவனது ஊர் கடல் நாரைகள் தங்கும் பனை மரங்கள் நிறைந்த ஊராகும் .ஐங்)114).*

*பொன்னால் செய்யப்பெற்ற கொண்கனின் கொடுஞ்சி நெடுந்தேர் .ஐங்)200), மணிகள் ஒலிக்க .குறு)212: 1-3), அடம்பங்கொடிகளை அறுத்துக்கொண்டும், நெற்தற்பூக்களைச் சிதைத்துக்கொண்டும் .ஐங்)101: 2 -5) தென்கடற்கரையில் விரைந்து வரும்அத்தேரில் அவன் . .நற்) குதிரைகள்149: 7-10), அல்லது கோவேறு கழுதைகளைப் .நற்)278: 5-9) பூட்டியிருப்பான் . அவன் வரும்வழி, வயச்சுறா திரியும் நீருடைய வழியாகும் .குறு)230).*

*செல்லும் வழியில் மலர்க் குவியலில் அமர்ந்து வண்டுகள் ரீங்காரமிடும் காட்சியைக் கண்ட அவன் குதிரை, அதனைப் புலி என்றெண்ணி வேகமாகச் செல்ல, அதனைப் பலமுறை இழுத்து நிறுத்த முயன்றும் முடியாமல் கல்லென்ற ஓசையோடு விரைந்து செல்லும் .நற்)249: 6 - 11). கோவேறு கழுதைகள் பூட்டப்பெற்ற தேரில் ஏறி வரும் கொண்கன், விரைந்து செல்வதனால் அவன் தலைமுடியில் வெண்மணல்கள் படிந்திருக்கும்கழுதைகளின் கால் குளம்புகளில் சிவந்த . இறால் மீன்கள் அழுந்தியிருக்கும் .நற்)278: 5 -9).*

*நெற்தல் நிலத் தலைவியை விட்டுப் பிரியாதவனான .நற்)72: 5 -7) அவன், பெரிய கழி சூழ்ந்த பாக்கத்தில் .நற்) கல்லென ஓசையெழ தன்னுடைய தேரில் வருவான் (குடியிருப்பில்)111: 9-10). சிலவேளைகளில் நள்ளிரவில் பலரும் உறங்கும் வேளையில் தேரோசையைக் குறைத்தபடியும் வருவான் .ஐங்)104).*

*கண்டோர் விரும்பும் தன்மையுடையவனான கொண்கன் .நற்)145: 4 -7), நெற்தல்நிலக் கானலில் புன்னை மரங்கள் செழித்து வளர்ந்திருக்கும் மேட்டு நிழலில் வந்து நிற்பான் .குறுந்)299).*

*கொண்கன் திருமணத்திற்கு வேண்டிய நன்னெறிகளை அறியாதவனாகவும், திருமணத்திற்குப் பொருந்தாத செயல்களைச் செய்பவனாகவும், திருமண ஏற்பாட்டோடு வராதவனாகவும் காட்டப்பெற்றுள்ளான் .ஐங்)119). கொண்கனால் தம் நலத்தை இழந்தப் பெண்கள் பலர் இருக்க .ஐங்)137), அவன் பரத்தையரையும் நாடிச் செல்பவனாக .ஐங்)138) உள்ளான்.*

*வனப்பு மிகுந்த பெண் மகளையுடைய கொண்கன், சங்கு ஈன்ற முத்துகளை விற்று ஏனை நிலத்தில் விளையும் பொருட்களைப் பெறும் பரதவர்களின் தலைவனாகத் திகழ்பவனாவான் .ஐங்)195).*

*சேர்ப்பன்*

*சேர்ப்பு என்னும் சொல், இடம், சேர்பு, கடற்கரை, கலப்பான பொருள், கப்பலினின்று சரக்கிறக்கும் பாலம், கட்டுமரத்தின் முன்புறம் பின்புறம் நீர் புகாதிருக்க தடுத்துக் கட்டப்பெறுமோர் மரப்பலகை என்று அகரமுதலி பொருள் தருகின்றது.3 சங்க இலக்கியங்களில் நெற்தற்குடிகளில் ஒருவராகச் சுட்டப்பெறும் சேர்ப்பன்(ர்), சேர்ப்பு என்னும் கடற்கரைக்குரியவன், கடற்கரைக்குரிய நிலப்பகுதிக்குத் தலைவன் என்ற பொருளில் வழங்கப்பெற்றுள்ளான் .*

*சங்க இலக்கிய நெய்தற்றிணை பாடல்களில் 60 இடங்களில் சேர்ப்பன் என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பெற்றுள்ளதுஅவற்றுள் .,*

*இடு மணல் சேர்ப்பன் குறு)205:5), இமிழ் பெரும் கடல் சேர்ப்ப குறு)243:4), இரு நீர் சேர்ப்பன் குறு)334:4), இரும் கழி சேர்ப்பன் ஐங்)112:2), இலங்கு நீர் சேர்ப்ப கலி)125:15, 126:5), உயர் மணல் சேர்ப்ப நற்)131:3), உரவு நீர் சேர்ப்பன் நற்)78:11), ஊதை அம் சேர்ப்பனை கலி)128:19), காமரு பூ கடல் சேர்ப்ப கலி)136:4), கானல் அம் சேர்ப்பன் குறு)145:2), குவவு மணல் சேர்ப்ப அகம்)310:10), தண் கடல் சேர்ப்பன் ஐங்)108:2), தண் புனல் சேர்ப்பனொடு குறு)304:7), தாழை சேர்ப்பற்கு குறு) 219:6), தெண் கடல் சேர்ப்பன் நற்)49:10), நளி கடல் சேர்ப்பனொடு நற்)299:9), நளி நீர் சேர்ப்ப ஐங்) 179:1), நீடு நீர் பனி துறை சேர்ப்பன் நற்)58:10), நீர் தண் சேர்ப்ப கலி)121:6, 124:4, 127:5), நெடு_நீர் சேர்ப்பன் நற்)235:10), பனி இரும் பரப்பின் சேர்ப்ப குறு)269:7), பனி நீர் சேர்ப்ப ஐங்)159:3), பன் மணல் சேர்ப்ப குறு)51:3), பாடு இமிழ் பனி கடல் சேர்ப்பன் புறம்)49:2), புலவு நீர் சேர்ப்பன் நற்) 94:6), பெருநீர் சேர்ப்பன் அகம்)290:8), பெரும் கடல் சேர்ப்பன் நற்)245:12), பெரும் துறை சேர்ப்பன் நற்)219:9), மணி நீர் சேர்ப்ப ஐங்)117:4), மலி திரை சேர்ப்ப நற்)63:11), மலி நீர் சேர்ப்ப நற்)363:6), மல்கு நீர் சேர்ப்ப நற்)375:3), மா நீர் சேர்ப்ப குறு)49:2), வயங்கு நீர் சேர்ப்ப கலி) 131:43), வார் மணல் சேர்ப்பன் நற்)307:5), விரிநீர் சேர்ப்ப குறு)226:7)*

*ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்: இனி இவை தரும் செய்திகளாவன.*

*ஒலி முழங்குகின்ற குளிர்ந்த கடலையுடைய சேர்ப்பன் .புறம்)49:1), கடல் ஒலி அவிந்து கிடக்கும் உப்பங் கழியில் சுறாமீன் திரிவதைப் பொருட்படுத்தாமலும் .அகம்)50:1-2), இரவில் முதலையோடு சுறா மீன் உலவும் உப்பங்கழிகளைக் கடந்தும் நெற்தல் நிலத்தலைவியைக் காண வருவான் .அகம்)80:1-3).*

*சேர்ப்பனது தேரில் பூட்டிய குதிரைகள் அம்புபோல ஓட வல்லவை .அழகுற நடப்பவை . தேர்ப்பாகன், தாற்றுக்கோலால் குத்தினால் அவை மிக விரைவாக ஓடும் என்று அஞ்சி கடிவாளத்தை அசைக்கும் குறிப்பாலேயே மெல்லச் செலுத்த தேர் நெய்தல் தலைவியின் ஊருக்குள் வரும்அது உப்பங்கழிகளைக் கடக்கும்போது அதன் சக்கரம் பட்டமையால் . மொட்டுகளோடு நின்றநெய்தல் கொடி அறுபடும் .அகம்)160: 8 -14).*

*உயர்ந்த அலைகளையுடைய கடற் பரப்பில், படகிலிருந்து வலையை இழுத்துப் பிடிக்கும் தமையன் கொண்டுவந்த மீன்களை அவனுடைய செல்வத் தங்கையர், விழா நிகழும் தெருக்களில் விலை கூறி விற்பர்அத்தகைய சோலை சூழ்ந்த சிறிய ஊர்களுக்குச் சே .ர்ப்பன் தலைவனாக இருந்தான் .அகம்)320:1-5).*

*சிறிய நல்ல ஊரில் .நற்)49:7) வாழ்ந்த சேர்ப்பன், குன்று போல் விளங்கும் மணல் மேடுகளையுடைய கடற்கரையில் இருந்த பல பழைய குடிகளுக்குத் தலைவனாவான்வளைந்த . உப்பங்கழி நிறைந்திருக்கும் அப்பகுதியில் பசுமையான நெய்தல் இலைகள் படர்ந்திருக்கும் . .நற்) அங்கு மதில்களுடைய கோட்டையில் பகைவருக்கஞ்சாது குடியிருப்பான்287:5-7). இவ்வூரைக் கண்டல் மரங்கள் நிறைந்துள்ள உப்பங்கழிகள் சூழ்ந்திருக்கும் .நற்)363: 1-4). கழியைச் சார்ந்த புன்னையின் மிக்க பூக்களையுடைய சோலையில் தனியாக நிற்கும் அவன் .அகம்)290: 8 - 11), விரைவாகச் செல்லும் தேரையும், ஏவலரையும் கொண்டவன்பெருந்தன்மை மிக்க இனிய . .அகம்) பிறர் வணங்கத்தக்க தோற்றம் கொண்டவன்.குணமுடையவன்310: 1-4).*

*வளைந்த நுகத்தடியில் பூட்டப்பெற்ற திரண்ட கால்களையுடைய கோவேறு கழுதையையும், நன்கு வடித்த மணிகளுடைய நீண்ட தேரையும் அதற்குப் பாகனையும் கொண்டவன் .அகம்)350: 6 -9) சேர்ப்பன்அவன் ., தாளத்துக்கு ஏற்ப நடப்பதில் தவறாத சிறப்புடைய குதிரையை இரவில் தோரோடு ஓட்டி வராமல், மணல் குன்றுகளைக் கடந்து நடந்தும் வருவான் )360:10-14).*

*தாது முதிர்ந்த முள்ளிச் செடிகளையும், மலர்ந்த புன்னை மலர்களையும் .குறு)175:4), தாழையையும் அழகிய தண்ணிய .குறு)304:7-8), கரிய நீருக்கும் உரியவன் இவன் .குறு)49). மகளிர் கடல் நீராடுகின்ற இடத்திற்கு சேர்ப்பன் தேரிலே மணி ஒலிக்க, வீரர்கள் ஆரவாரிக்க வருவான் .நற்)307). தலைவியை அடைய அவளது நெற்றியை நோக்கி கைக்கூப்பி தொழுது நிற்பான் .நற்) 245:6-12).*

*பூட்டப்பெற்ற தேர்ச் சக்கரத்தின் உள்வட்டம் உப்பங்கழியில் புதையுமாறு பொற்கலன்களைச் சுமந்து வரும் .நற்)78:8-11) குதிரைகளைக் கொண்ட சேர்ப்பன் செல்வந்தனாகத் திகழ்ந்தான் .கலி)125:5).*

*துறைவன்*

*துறைவன் என்னும் சொல் கடற்கரையின் துறைக்கு உரியவன் என்னும் பொருளிலும், கடற்கரைக் குடிகளின் தலைவன் என்னும் பொருளிலும் வழங்கப்பெற்றுள்ளதுகடற்கரைத் . சங்க இலக்கியத்தில் .துறைகள் துறைவர்களுக்குரியதாக இருக்கக்கூடும்80 இடங்களில் துறைவ, துறைவர், துறைவன் என்று இவன் குறிக்கப்பெற்றுள்ளான்துறைவனின் துறைச் சிறப்பு . .அதிகமாக எடுத்துரைக்கப்பெற்றுள்ளது*

*துறைவன் குறித்த பதிவுகளாவன:*

*புன்னைப் பூக்களையும் .ஐங்)110), நெய்தற் பூக்களையும் .ஐங்)109:2) சூடிய துறைவன், மீன் கொழுப்பாலாகிய நெய்யை வார்த்து ஏற்றிய விளக்கொளியில் .நற்)175) கடற்கரையின் திண்ணிய மணற்பரப்பில் உறங்குவான் .அகம்)30:8-11).*

*அவன் இருக்கும் இடத்தருகே இறால் மீன்களின் இனத்தைக் கடலலைகள் கொண்டுவந்து சேர்க்கும் .குறு)109). அவற்றையும், பரதவர் கொண்டுவந்த அயிலை மீனையும் அவன் அனைவருக்கும் பகுத்துக்கொடுப்பான் .அகம்)70:1-7). பரதவர்களோடும் அவர்தம் உறவினர்களோடும் இணைந்து கள்ளுண்டு மகிழ்வான் .நற்)388:9). அவனது துறையில் மீன் வற்றலோடு இறால் வற்றலும் எங்கனும் பரவி கிடக்கும் .குறு)320).*

*ஒருநாள் கடலில் இருந்து உப்பங்கழி பிரியும் துறைமுகத்தில் அவனது தேர் வந்துகொண்டிருந்தபோது ஒரு சுறாமீன் அத்தேரில் பூட்டியிருந்த குதிரைகளைத் தாக்கியது . துறைவனின் தேர்ப்பாகன் தேரை நிறுத்தி வேறு சிறந்த குதிரைகளைக் கொண்டுவந்து .அகம்) அப்போது துறைவன் கடற்கரைச் சோலைக்குச் சென்று தங்கலானான் .பூட்டினான்190: 10-17).*


*மணற்குவியலைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெடிய பனை மரங்கள் நிறைந்திருக்கும் சோலையில் .குறு)248), பறவைக் கூட்டங்கள், அலைமோதுவதால் இறந்த மீனை இரையாகத் தின்னுமே அன்றி, தான் ஒன்றன் உயிரைப்போக்கி இரையாக உண்ணாதுமேலும் ., கரை வளைத்துக்கொண்டிருக்கும் கடற்கரைக் கழியில் பறவைகள் பிடித்துத் தின்றுவிட்டு எறிந்த மீன்களை மட்டுமே உண்பவன் அல்லாமல், ஒன்றன் உயிரைக் கொன்று உண்ணாத அருள் உள்ளம் படைத்தவன் துறைவன் .கலி)131:31-34). இத்தகையவன் நெற்தல் தலைவியோடு சேர்ந்து நீராடுவான் .ஐங்)115).*

*நீர்உண் துறையில் கிடந்த நாவல் பழத்தை நண்டு ஒன்று அதன் அழகுகெடுமாறு இழுத்துச்சென்று, தாழையின் வேர்ப்பகுதியில் இருக்கும் தன் பெண் நண்டிடம் கொடுத்ததைக் கண்ட துறைவன் இது நற்செய்கை எனப் பாராட்டுவான் .அகம்)380:4-7).*

மேற்கண்ட செய்தித்தொகுப்புகளின் வாயிலாகக் கீழ்க்கண்ட முடிவுகளைப் பெறமுடிகின்றன.

| எண் | பொருள் | கொண்கன் | சேர்ப்பன் | துறைவன் |
|---|---|---|---|---|
| *1* | பாடல் எண்ணிக்கை | *24* | *60* | *80* |
| *2* | பொருள் வளம் | செல்வந்தன் | செல்வந்தன் | மற்ற இருவரைவிட குறைவு |
| *3* | தலைமைத்துவம் | பரதவர்களுக்குத் தலைவன் | பழைய நெய்தற்குடிகளுக்குத் தலைவன் | பரதவர்களுக்குத் தலைவன் |
| *4* | தலைமாலை | தெரியவில்லை | தெரியவில்லை | புன்னை, நெய்தல் |
| *5* | ஊர்திப் பயன்பாடு | பொன்னாலான தேர். குதிரை அல்லது கோவேறு கழுதை பூட்டப்பட்டது. | குதிரை அல்லது கோவேறு கழுதை பூட்டிய தேர் | குதிரை பூட்டிய தேர் |
| *6* | தன்மை | கண்டோர் விரும்பத்தக்கவன். பொறுப்பிலாதவன் | இனிய குணமுடையவன் | உயிரிரக்கம் கொண்டவன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | வாழ்ந்த இடம் | கடற்கரை சிற்றூர் | பரதவர் தெருக்களின் தலைவன்.<br>மணல்வெளியில் படுத்துறங்குவான்.<br><br>அகழிகள் சூழ்ந்த கோட்டையிலும் வாழ்ந்தான். | கடற்கரை சிற்றூர் |




தொகுப்புரை

நெய்தல் நிலக் குடிகளுள் கொண்கன், சேர்ப்பன், துறைவன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்இவர்களை உரையாசிரியர்கள் நெய்தல்நிலத் தலைமக்களெனக் . பரதவர் .குறிப்பிடுகின்றனர்உள்ளிட்ட பிற நெய்தல்நிலக் குடிகளுக்கு இவர்கள் தலைவர்களாக இருந்துள்ளதைச் சங்க இலக்கியக் குறிப்புகளின்படி தெளிவாக உணர முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. சிபாலசுப்பிரமணியன்., மலர் காட்டும் வாழ்க்கை, ப .02
2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, தொகுதி 2 - பகுதி 3, ப .188
3. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, தொகுதி 3 -பகுதி 3, பக்.126

துணைநூற்பட்டியல்


இளங்கோ சி., 2015, தொல் தமிழர் வரலாறும் பண்பாட்டு ஆய்வுகளும், அலைகள் வெளியீட்டகம், சென்னை

சங்க இலக்கியம், கோவிலூர் மடம் வெளியீடு, 2003, கோவிலூர்.

சங்க இலக்கியம், தமிழ்மண் பதிப்ப வெளியீடு, 2008, சென்னை -17

சிற்றம்பலம் சி.க., 1999, பண்டைய தமிழகம், குமரன் புத்தகநிலையம், கொழும்பு.

தனஞ்செயன் ஆ., 2010, சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும், நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை.

தேவநேய பாவாணர், 2000, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி இயக்ககம், சென்னை

தொல்காப்பியப் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, 1916, சென்னை.

*பிள்ளை கே.கே., 2011, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.*
*மாதையன் பெ., 2012. சங்க கால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன், சென்னை*
*முத்துகண்ணப்பர் தி., 2004, சங்க இலக்கியத்தில் நெய்தல் திணை, அதிபத்தர், சென்னை*

********* ********* ********** ********* ********* ********** ********** **********